கோவை, வேளாண்மை இணை இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணைகள்
முன்னிலை– திருமதி. இரா.சித்ராதேவி, பிஎஸ்ஸி,( விவ.) எம்பிஏ.,

அ3 / 14375 / 2018 நாள். 22 .07.2021

பொருள் பணியமைப்பு – தமிழ்நாடு அமைச்சுப்பணி – கருணை அடிப்படையில் பணி நியமனம்– கோவை, விதை ஆய்வு துணை இயக்குநர் அலுவலகம் திரு த. ராஜ்பரத் இளநிலை உதவியாளர் (பிணையமற்றது) – பணிவரன்முறைப்படுத்தி உத்திரவிட்டது இரத்து செய்து திருந்திய ஆணையிடல்.

பார்வை
1. சென்னை, வேளாண்மை இயக்குநர், அவர்களின் செயல்முறை ஆணை எண். அநிபி6/177618/18 நாள் 25.06.2018
2. விதைச்சான்று மற்றும் அங்ககச்சான்று இயக்குநர், கோவை அவர்களின் செயல்முறை ஆணை எண். அ1/14425 /18 நாள் 01.10.2018
3. இவ்வலுவலக கடித எண்.அ3/14375/2018, நாள் 16.03.2020
4. சென்னை, வேளாண்மை இயக்குநர், அவர்களின் கடித எண். அநிபி2/39118/20 நாள் 21.04.2021
5. இவ்வலுவலக செயல்முறை ஆணை எண்,அ3/14375/2018, நாள் 08.07.2021

-----

**ஆணை**

பார்வை (5)ல் வழங்கப்பட்ட செயல்முறை ஆணையானது இதன் மூலம் இரத்து செய்யப்பட்டு திருந்திய ஆணை வழங்கப்படுகிறது.

பார்வை (1) மற்றும் (2)–ல் காணும் செயல்முறை ஆணைகளின் படி கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் (பிணையமற்றது) ஆக பணிநியமனம் வழங்கப்பட்டு கோவை , விதை ஆய்வு துணை இயக்குநர் அலுவலகத்தில் 10.09.2018 முற்பகல் பணியேற்றுள்ள திரு த.ராஜ்பரத் அவர்களுக்கு அரசாணை (நிலை) எண்.48 தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (க்யூ1)த்துறை நாள் 26.2.2021 ல் வழங்கப்பட்ட வழிமுறைகளின்படி இளநிலை உதவியாளர் (பிணையமற்றது) பதவியில் பின்வருமாறு பணிவரன்முறைப்படுத்தப்பட்டு உத்திரவிடப்படுகிறது.

| வ. எண். | பெயர் மற்றும் பதவி | முதன்முதலில் பணியேற்ற அலுவலகம் | முதன்முதலில் பணியேற்ற நாள் | பணிவரன் முறைப் படுத்திடும் நாள் |
|---|---|---|---|---|
| 1. | திரு. த. ராஜ்பரத் இளநிலை உதவியாளர் (பிணைபமற்றது) | விதை ஆய்வு துணை இயக்குநர் அலுவலகம், கோவை. | 10.09.2018 முற்பகல் | 10.09.2018 முற்பகல் |

மேற்படி பணிவரன்முறைப்படுத்தப்பட்டுள்ள இவர் இப்பதவியில் இரண்டாண்டு கால தகுதிகாண் பருவத்தினை தொடர் மூன்றாண்டு பணிகாலத்தில் முடிக்க வேண்டும் எனவும், தகுதிகாண் பருவக்காலத்தில் வரையறுக்கப்பட்ட பவானிசாகர் அடிப்படை பயிற்சியினை நிறைவு செய்த பின்னரே தகுதிகாண் பருவம் முடிக்கப்பட்டு உத்திரவிடப்படும் எனவும் இதன்மூலம் உத்திரவிடப்படுகிறது.

வேளாண்மை இணை இயக்குநர்,
கோவை.

இணைப்பு .. மேற்படி பணியாளரின் இணைப்பில் கண்ட அசல் ஆவணங்கள்

பெறுநர்

திரு. த. ராஜ்பரத், இளநிலை உதவியாளர் (பிணையமற்றது) விதை ஆய்வு துணை இயக்குநர் அலுவலகம், கோவை..

வழி மற்றும் நகல்— விதை ஆய்வு துணை இயக்குநர் , கோவை. — மேற்படி பணியாளரின் அசல் ஆவணங்கள் இணைப்பில் கண்டவாறு இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது. இணைப்பில் கண்ட ஆவணங்களை பெற்றமைக்கான ஒப்புதலினை அனுப்பிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. மேலும் மேற்படி பணிவரன்முறை செய்த விவரம் தனியரின் பணிப்பதிவேட்டில் பதிவு செய்து வேளாண்மை இயக்குநர், சென்னை அவர்களுக்கு விவரம் தெரிவிக்கவும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

நகல்— வேளாண்மை இயக்குநர், சென்னை அவர்களின் தகவலுக்காக பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

நகல்— பணிப்பதிவேடு / இருப்புக் கோப்பு /உபரி— 2